**<u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.88/2022 தேதி-17.04.2025

(P.W.1) - செல்வராஜ்

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பட்டா நிலத்தை புறம்போக்கு என்று PWD நம்பர் செய்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்குசொத்து முதலில் எந்த கிராமத்திற்குட்பட்டது என்றால் முதலில் வியன்னூரில் இருந்தது தற்போது கண்டனூர் ஊராட்சியில் உள்ளது. அதன் சர்வே எண் 404/8 A ஆகும். மேற்படி சொத்தில் 15 சென்ட் மட்டும் எனக்கு சொந்தம் என்றால் சரிதான்.

வழக்கு பட்டிகை சொத்தின் எந்த திசையில் குக்குண்டு குளம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. அந்த சொத்து அரசுக்கு சொந்தமானது அது 2 ஆம் பிரதிவாதியான அரசுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த குளம் கண்ணனூர் கிராமத்திற்குட்பட்ட புதுபுல எண் 404/9 க்குட்பட்டது என்றால் சரிதான். அந்த குளமும் அதன் கரையை சார்ந்த பகுதியும் 5.50 கெக் டேர் என்றால் சரியல்ல. புல எண்களான 404/8 எ மற்றும் 404/9 ஆகியவைகள் முறையாக அளவீடு செய்து அரசு வரைபட பதிவேடுகளின்படி உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ-3 பட்டாவின்படி பட்டா எண் 4499 ன்படி 23 பேர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ன்படி விலையாதாரத்தின்படி நான் மேற்படி நிலத்தை உட்பிரிவு செய்து தனிப்பட்டா பெறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ன்படி இது தனிப்பட்டா அல்ல கூட்டுபட்டா என்றால் சரியல்ல. 404/8 எ வில்( 71.63 சென்ட் ) நிலம் என்றால் சரிதான். எனக்கு 15 சென்ட்நிலம் மட்டும் சொந்தமானது. 404/9 ல் எனக்கு பாத்தியப்பட்ட நிலம் எதுவும் இருக்கிறது என்று இந்த வழக்கிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி 404/9 ல் எந்த பரிகாரம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் வழக்கு பட்டிகை சொத்தில் எந்த புகார்மனுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். 1 மற்றும்

2 ஆம் பிரதிவாதிகள் வழக்கு சொத்தைப்பொறுத்து ஏதாவது இடையூறு செய்தார்களா என்றால் வழக்கு தாக்கல் செய்த பிறகு எந்த இடையூறும் செய்யவில்லை.

404/9 குக்குண்ட குளத்தில் அரசுக்கு சொந்தமாக குக்குண்ட குளத்தின் கரையை நானும் பாபு, பால்ராஜ் மற்றும் ரபேக்கால் ஆகியேரர்கள் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஆக்கிரமிப்பை தாலுகா அளவீட்டார்கள் மூலம் சட்டப்படியாக அளவீடு செய்து திட்டப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அளவீடு செய்யவதற்கு பிரதிவாதிகள் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சாிதான். அரசு புறம்போக்கு நிலத்தை குளம்புறம்போக்கு நிலத்தை மேற்படி அரசு புறம்போக்கு நிலத்தில் இருந்த மரங்களை ஏலம்போட்டார்கள் என்றால் எனது பட்டா நிலத்தில் உள்ள மரத்தை ஏலம் போட்டார்கள். தமிழ்நாடு நீர்நிலைகள் பாதுகாப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் சட்டம் 2007 ன்படியும் மாண்புமிகு உயர்நீதிமன்ற அறிவிப்பின்படியும் 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் சட்டப்படியான தனது பணியை செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி வழக்கு பட்டிகை சொத்தில் அத்துமீறல் எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அரசு புறம்போக்குநிலத்தை சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்து உண்மையை மறைத்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்த வழக்குமூலமும் இல்லை என்றால் சரியல்ல. பிரிவு 80 படியும் எந்த அறிவிப்பும் முறையாக அளிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பை பிரதிவாதிகள் முறைப்படியாக அகற்றிய காரணத்தினால் அவர்களை கஷ்டப்படுத்த வேண்டி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு செலவுத்தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல.